**செய்தி வெளியீடு எண்: 477** **நாள்: 12.08.2012**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.8.2012 அன்று தலைமைச் செயலகத்தில், கூடுதல் வருமானம் ஈட்டிய கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களைச் சேர்ந்த 2,02,173 பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக 26 கோடியே 74 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார்கள்.

கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் 15 கோடியே 40 லட்சம் ரூபாய் லாபம் ஈட்டியுள்ளதால் பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா வீதம் 4 கோடியே 10 லட்சம் ரூபாயை 21,189 பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கவும்;

மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் 7 கோடியே 23 லட்சம் ரூபாய் லாபம் ஈட்டியுள்ளதால் 27,856 பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா வீதம் 2 கோடியே 41 லட்சம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கவும்;

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் இரண்டு ஆண்டுகளில் முறையே 13 கோடியே 90 லட்சம் ரூபாயும், 15 கோடியே 74 லட்சம் ரூபாயும் லாபம் ஈட்டியுள்ளது. முதலாண்டு லாபம் ஈட்டிய 52,277 பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா வீதம் 7 கோடியே 96 லட்சம் ரூபாயும், இரண்டாம் ஆண்டு லாபம் ஈட்டிய 52,437 பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா வீதம் 7 கோடியே 27 லட்சம் ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்கவும்;

திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் 10 கோடியே 84 லட்சம் ரூபாய் லாபம் ஈட்டியுள்ளதால் 48,414 பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா வீதம் 5 கோடி ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

அதன்படி, தமிழகத்திலுள்ள 17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் கூடுதல் வருமானம் ஈட்டிய கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களைச் சேர்ந்த 2,02,173 பால் உற்பத்தியாளர்களுக்கு அவ்வருமானத்தை பகிர்ந்தளிக்கும் நோக்கில் 26 கோடியே 74 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.8.2012 அன்று தலைமைச் செயலகத்தில் ஊக்கத் தொகையாக வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறைச் செயலாளர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 12.8.2012